# இனவரைவியலும் சங்க இலக்கிய குறிஞ்சி திணைக்கட்டமைப்பும்

முனைவர். பீ. பெரியசாமி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,

ஆரணி, திருவண்ணாமலை- 632317,

*https://orcid.org/0000-0002-7395-9699*

*Dr. B. Periyaswamy,*
*Assistant Professor, Department of Tamil,*
*Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317,*
*https://orcid.org/0000-0002-7395-9699*

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதர்கள் முதன் முதலில் தோன்றிய நிலம் குறிஞ்சி நிலமாகும். அந்நிலத்தை மானிடவியல் நோக்கில் ஆராய்ந்து அவர்களின் வாழ்வியல் முறைகளை எடுத்தியம்புவது இக்கட்டுரையின் நோக்கமாகும். அந்தவகையில் சங்ககால குறிஞ்சி நில கட்டமைப்பு, தொல்காப்பிய குறிஞ்சி நில பாகுபாடு, குறிஞ்சி நில கருப்பொருள், உரிப்பொருள்களில் நீர், தொழில், உணவு, உடை. அணிகலன், வழிபாடு, பொழுது ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இனவரைவியலும் சங்க இலக்கிய குறிஞ்சி திணைக்கட்டமைப்பும் எனும் இக்கட்டுரை குறிஞ்சிநில மக்களை மானுடவியல் நோக்கில் ஆராய்ந்துள்ளது.

**Abstact**

*Kurinji Land is the land where humans first appeared. The purpose of this article is to explore that land from an anthropological point of view and take their life styles.In this way Sangam Kurinji land structure, archeological Kurinji land discrimination, Kurinji land theme, water, industry, food, clothing in adjectives. Adornment, Worship, based this article, Ethnography and Sanga Literary Kurinji Land, has explored the people of Kurinji land from an anthropological point of view.*

**முக்கியச் சொற்கள்**

மனுடவியல், குறிஞ்சி, குறவர், உணவு, உடை, அணிகலன், வழிபாடு

**Keywords**

Anthropology, Kurinji, Kuravar, Food, Dress, Ornaments, Worship

**முன்னுரை**

தமிழ்ச் சமூகத்திற்கான பௌதிகத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு முன்னோர்களின் கட்டுமானம் தேவையான ஒன்றாகிறது. இக்கட்டுமானம் ஒரு சமூகத்தை, இனத்தை, இலக்கியத்தை, ஒரு குடியின் தோற்றத்தை தொடக்கம் முதல் நடப்பு வரையிலும் தொடர்ந்து கட்டமைக்கிறது. இக்கட்டமைப்பில் புலவர்களின் ஆளுமை நிலம், திணை சார்ந்து வாழ்வாக வெளிப்படுகிறது. இது மரபுவழிச் சூழலிருந்து தொடர் பண்பாட்டு மரபாக இருந்து வருவதுடன், இம்மரபு வழியாக்கத்தில் அறிவியலின் உட்புகுப்பும் உள்நுழைந்து மக்களுக்கான வளர்ச்சியாக கண்டுபிடிப்பை வெளிக்காட்டுகிறது. அந்த வகையில் தொல்தமிழர்களின் ஐவகை வாழ்வின் பிரதிபலிப்பு வெவ்வேறு

சூழல்களில் பதிவேற்றம் கண்டுள்ளன. அதன் பண்பாட்டுக் கூறுகளைத் குறிஞ்சித் திணை பெற்றுள்ள இடத்தை தொகுத்து ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

**மானிடவியல்**

மானிடவியல் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து வளர்ந்து வருகிறது. இதனால்மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான அறிவியல் என்றே கூறலாம். "இதுமனிதனை உயிரியல் நிலையிலும், சமுதாய நிலையிலும் அறிய முயல்கிறது." (பக்தவத்சல பாரதி - பண்பாட்டு மானிடவியல். ப.65) இப்பதத்தின்ஆய்வுப் பரப்பானது ஒரு குறிப்பிட்ட எல்லைப்பரப்பிற்குள் இடம், காலம், சூழல், அமைப்பு,வாழ்க்கைமுறை என்ற குறுகிய வரையறைக்குள்ளாகாமல் பரந்து விரிந்து அனைத்துப் பண்பாட்டுமரபுகளையும், மரபுசார்ந்த மற்றும் மரபுசார மக்களையும் ஆராயும் தன்மை கொண்ட துறையாகவும் உருப்பெற்றுள்ளது.

**குறிஞ்சி நிலத்தின் இனவரைவியல் பொதுமைகள்**

குறிஞ்சிநிலம் சுற்றுச்சூழல், இயற்கைவளம் நிறைந்துக் காணப்படக்கூடிய மலைப்பகுதி ஆகும். மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சிநிலம் கிழக்குத்தொடர்ச்சிமலை, மேற்குத் தொடர்ச்சிமலை எனும் இரண்டு வெவ்வேறு பூகோள அமைப்புடைய நிலஅமைப்பைக் கொண்டுள்ளது. "கிழக்குத் தொடர்ச்சிமலைகள் தமிழகத்தின் தென்பகுதியில் தொடங்கி ஒடிசாவரை கிழக்குக்கடற்கரைக்கு அருகாமையில்வரை அமைந்துள்ளன. மேற்குத்தொடர்ச்சி மலையானது 'சஃயாத்ரி மலை' என்றும் அழைக்கப்படுவதுண்டு. இந்தியாவின் மேற்குக் கடற்கரையாகிய அரபிக்கடலோரத்தின் தொடர்ச்சிவரை இதன் பரப்பு காணப்படுகிறது." (பக்தவத்சல பாரதி - தமிழகப் பழங்குடிகள். பக்.63-67) இவ்விரண்டு மலைப்பகுதிகளும் தமிழ்நாட்டின் பூகோளத்திற்கான மலையும் மலைசார்ந்த பகுதியாகும். இங்குதான் தொடக்ககால நாகரிகம் தொடங்கி இருக்கவேண்டும். ஏனென்றால் மக்கள் நாடோடி வாழ்க்கையை விலங்குகளோடு ஒன்றிணைந்து வாழ்ந்து அதன் படிமலர்ச்சியிலிருந்து வளர்ச்சியுற்று இனக்குழு வாழ்க்கைக்குமாறி பின்பு வாழத்தொடங்கியது குறிஞ்சி நிலமாகும்.

வாழும் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதத் தன்மையில் மனிதன் உணவு ஈட்ட முற்படச்செய்தான். "கிமு.10.000 ஆண்டுகளுக்கு முன்னர்வரை வேட்டையாடுதலும் இயற்கையில் கிடைக்கும் உணவுப்பொருட்களைச் சேகரித்தலுமே முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக இருந்தது. கி.மு.7,000 ஆண்டு வாக்கில் வடக்கு ஆப்பிரிக்கா, சிற்றாசியா, தெற்காசியா போன்ற பழைய உலகப் பகுதிகளிலும் புத்துலகத்தைச் சேர்ந்த பாலைவன மக்களும், புத்துலகப் பகுதியில் வாழ்ந்த தொன்மைப் பண்பாட்டினரும் கால்நடைகளை மேய்த்து வாழத்தொடங்கினர். கி.மு.3,000 ஆண்டு வாக்கில் உலகின் பெரும்பாலானவர்கள் வேளாண்மையை முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக ஏற்கத் தொடங்கினர். இதன் அடிப்படையில் மானிடவியலாளர்கள் மனித இனத்தினை நான்கு நிலைகளில் பகுத்துக்கொண்டனர். 1.வேட்டையாடி உணவு சேகரித்தல், 2. கால்நடைகளை வளர்த்தல். 3. எளிய வேளாண்முறை (உழுது பயிரிடும்முறைக்கு முந்திய வேளாண்மை, காட்டெரிப்பு வேளாண்மை, தோண்டுகுழி கொண்டு விதைத்தல் ஆகியன.) 4. பண்பட்ட வேளாண்மை (உழுதல் வேளாண்மை)" (மேலது, பக்.461-462) இவையே குறிஞ்சி, முல்லை, மருதம் என்று வளர்நிலையைக் கொண்டு காணப்படினும், தொடக்ககால வாழ்க்கையானது வேட்டைச்சமூக வாழ்க்கையாகவே இருந்து வந்தன.

**குறிஞ்சி நில அமைப்பு**

மலைகளும் குன்றுகளும் அதனை ஒட்டிய பகுதியுமே குறிஞ்சிநிலமாகும். தமிழகத்தின் குறிஞ்சி நிலமாக மேற்குத்தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத்தொடர்ச்சி மலைகள் ஆகும். மேற்குத் தொடர்ச்சிமலை அரபிக்கடலையும்,

கிழக்குத்தொடர்ச்சிமலை வங்காளவிரிகுடாக் கடலையும் நில எல்லையாகக்கொண்டு அமைந்துள்ளது. இம்மலைகள் பிளவுகளையும், குகைகளையும் கூட்டமாகக்கொண்டு நெருங்கிக்காணப்படும். மலைகளில் நெருக்கமாக வேலிபோல் முள்ளமைந்து அடர்ந்திருக்கும். இதனை, “முந்தூழ் வேலியமலை” (குறுந்.239). இம்மலை நிலத்தைக் காட்டிலும் பெரியது வானுலகத்தைக் காட்டிலும் உயர்ந்து தோற்றமுறக்கூடியது என்பதை, “நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று” (குறுந்.3). என்று காட்டுகிறது குறுந்தொகை.

## பொழுது

குறிஞ்சி மலைசார்ந்த நிலமாக இருப்பதால் அங்கு இயற்கையின் செழிப்பு நிறைந்திருக்கும். பருவகாலமும் புணர்நிலைக்குள்ளே நிகழ்ந்து வரும். பொழுதுகளின் விடிவும், அதன் அடைவும் மிகவிரைவாக நிகழக்கூடும். குளிர் அடிக்கடி நிகழ்வதால் இரவுபொழுதுகளில் கணவன் - மனைவியிடையே கற்புக்கான இனப்பெருக்கமும், தலைவன் - தலைவியிடம் களவுக்கான தூண்டல்களும் நிகழும். தொல்காப்பியர் இத்தன்மையில் குறிஞ்சிக்கான பொழுதுகளை வகுக்கும்போது,“குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்” (தொல்.பொருள்.அகத்.952)என்று கூறி அதன் சூழலை, “பனி எதிர் பருவமும் உரித்தென மொழிப” (தொல்.பொரு.அகத்.953) என்றுரைக்கிறார். பணி இயல்பாகவே மலைப்பிரதேசங்களில் ஏற்படும். தமிழகத்தில் கூதிர் (பனி) நிகழும் மாதங்களாக ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகும். இன்றும் கிராமப்புறங்களில் மார்கழி மாதத்தில் மச்சு (மேல்கூரை) குளிரும். தைப்பொறந்தால் தரையும் குளிரும் என்ற வழக்காறுகள் புழக்கத்திலுள்ளது. கூதிரும் யாமமும் மனித இனப்பெருக்கத்திற்கான காலமாகக் கொள்ளும் சூழலில், மனிதனின் தோற்றப் பாகுபாடும் குறிஞ்சி நிலத்திற்கே உரியதாகக் கொள்ள நேர்கிறது.

மானிடவியலரும் மனிதன் நாடோடி வாழ்க்கையிலிருந்து இனக்குழு மாற்றத்திற்கு மாறியது குறிஞ்சி நிலத்தில்தான் என்கின்றனர். குறிஞ்சிக்கான பொழுதுகளை அள்ளூர் நன்முல்லையார்,

“காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர் துஞ்சு யாமமும் விடியலும் என்று இப்
பொழுது” (குறுந்.32)

என்றும், கூதிர் காலத்தின் இரவு நேரங்களில் மிதமான வாடைக்காற்று வடக்கிலிருந்து வீசக்கூடும். வெண்கொற்றன் இதனை, “ஊதை தூற்றும் கூதிர் யாமத்து” (குறுந்.86) என்றும் கூறுகின்றார். கூதிர் காலத்தின் யாமப்பொழுதில் காமம் மிகுபட்டதால் மலைகளும், காடுகளும் இருண்டுக் காணப்படினும் ஊர்கள் ஒலி அடங்கி மக்கள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அத்தகைய யாமப்பொழுதினை,

“மன்றுபாடு அவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையோடு இன்றே
யாமம் கொளவரின் கனைஇ, காமம்
கடலினும் உரைஇ கரைபொழி யும்மே” (அகம்.128)

என்று கூறுகின்றனர். வாடைக்காற்று வீசத்தொடங்கினால் பனிக்காலத்துக்கான காலம் தொடங்கும் நிலை ஏற்படும், பனிக்காலம் தொடங்கும்போது கூதிர்ப் பருவத்தில் மழைநீர், அருவிநீர் நின்று விடுவது இயல்பாகும். பனிக்காலம் வருவதற்கு முன்பே காதலர் வந்திருந்தனர் என்று குறிஞ்சிக்கான பொழுதுகளைச் சுட்டுகிறார் (ஐங்.223,3-5).

## கருப்பொருள்

குறிஞ்சி நிலத்திற்குறிய மக்கள் முதற்பொருளிலிருந்தே கருப்பொருட்கள் தோற்றம் கொள்கிறது. ஆகையால் ஒரு நிலத்திற்கு நிலமும் பொழுதும் முதன்மையான தேவையாகும். இவையே நிலத்தினை நிறைவுசெய்கிறது. நிலத்தின்

சாயலோடு மக்களைக் காணும்போது மக்கள் இருவகையில் இருந்துள்ளன. அவை 1.நிலத்தில் வாழ்பவர், 2.நிலத்தொழில் மேற்கொண்டு வாழ்பவர். தொல்காப்பியம் இதனை,

"பெயரும் வினையும்என்று ஆஇரு வகைய
திணைதொறும் மரீஇய திணைநிலப்பெயரே" (தொல்.பொருள்.அகத்.966)

என்று கூறுகிறது.

குறிஞ்சி நிலத்துக்குறிய மக்கட்பெயரை நச்சினார்க்கினியர்"கானவர், வேட்டுவர், குறவர், இருளர், குன்றுவர், வேட்டுவித்தியர், குறத்தியர், குன்றுவித்தியர், ஏனைப் பெண்பாற்பெயர்களை இருளச்சி என்று குலப்பெயராகவும், வெற்பன். சிலம்பன், கொடிச்சி என்று உரிப்பொருட்குறிய தலைமக்கட்பெயராகவும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்." (நச்சர் உரை - தொல்காப்பியம் உரைவளம். பொருளதிகாரம்.அகத். ப.34) ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளையவர்கள், "குன்றவர், குறவர் என்பன பொதுவாகக் குறிஞ்சி நிலங்களுக்குரிய பெயர்களாகும். குறிஞ்சி நிலத்தின் கானத்தில் வாழ்ந்தவர்களைக் கானவர் என்றும், குறிஞ்சியில் வாழ்ந்தவர்களைக் குறவர் என்றும், குன்றுகளிலும் கொடுமுடிகளிலும் வாழ்ந்தோரைக் குன்றவர், கொடிச்சியர் என்றும் அழைக்கப்பட்டனர்" (ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ) - நற்றிணை. ப.1081) என்றும், "குறிஞ்சி நிலத்தலைவன் வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்னும் திணைப்பெயரும், தலைவி கொடிச்சி எனப்பட்டாள். குடிமக்களுள் ஆடவர், கானவர், குன்றுவர், வேட்டுவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் குன்றுவித்தியர், வேட்டுவித்தியர், குறத்தியர் எனப்பெயர் பெற்றனர்"( மா.இராசமாணிக்கனார் - பத்துப்பாட்டு ஆராய்ச்சி. ப.281) என்று மா.இராசமாணிக்கனாரும் குறிஞ்சி நிலமக்களுக்குரிய பெயர்களைச் சுட்டிச்செல்கின்றனர்.

### குறவர்கள்

குறவர்கள் தங்களது பூர்வீகம் மலையாகும். இவர்கள் குறிஞ்சி நிலத்தில் தங்களது வாழ்க்கையைத் தொடங்கினர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்களின் வழிமரபினராக இன்றைய குறவர்கள் தங்களைக் கருதிக்கொள்வதும், வேட்டைத்தொழிலில் ஈடுபட்ட இனக்குழுவினர் என்பதை வெளிப்படுத்தும் விதமாக தங்களை வேட்டுவர், வேடுவர் என்றும், "குறவர்கள் சங்குக் கொடியில் வில்-அம்பினை வேட்டைக் கருவியாகச் சின்னமாகவும் கொண்டு வாழ்கின்றனர்."(மணி கோ. பன்னீர்ச்செல்வம் - குறவர் பழங்குடி இனவரைவியல் ஆய்வு. ப.ஒ-ஔ) இக்குறவர்களைக் குறவர் (அகம்.322,322,78, குறுந்.339,846), குன்றக்குறவன் (ஐங்.257,252,253,254), பெரும்புனக் குறவன் (குறுந்.82) என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்த வீரப்பெருமக்களாவர்.

### குறிஞ்சியின் நீராதாரங்கள்

மலையும் மலைசார்ந்த நிலமான மலைகளில் நீராதரங்களாக விளங்கி வருபவை அருவிநீரும், சுனைநீருமே ஆகும். புவிப்பரப்பிலிருந்து மலைகள் உயர்ந்து காணப்படுவதால் மழை விரைவாகப் பெய்யக்கூடும். இங்கு குடிகொண்டுள்ள மக்களும் வன்புலத் தொழில்களையே தொழிலாக மேற்கொண்டனர். வறட்சி மாறிய காலத்தில் மென்புலத் தொழில்களும் செய்தனர். அதற்கு நீராதாரங்கள் உறுதுணையாக இருந்தன. குறிஞ்சியில் ஆங்காங்கு நீர்த்துறைகள் இருந்தன. மழைக்காலங்களில் நீர்த்துறைகளிலிருந்தும் காட்டாறுகளிலிருந்தும் நீர்பெருக்கு பெருக்கெடுத்து ஓடியதை,

"நீர் நிறம் கரப்ப ஊழுறுபு உதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்று" (அகம்.18:1-2)

என்ற பாடல் வரி மூலம் உணரலாம்.

**வாழ்க்கையும் தொழிலும்**

தொல்குடியினர் தங்களது வாழ்க்கையை முதன் முதலில் தொடங்கியது மலையும், காடுமான குறிஞ்சி நிலமாதலால் அந்நிலத்தில் ஆண்களும் பெண்களும் ஒத்தத் தன்மையில் வேட்டைத் தொழிலையும், காவல்தொழிலையும் ஒன்றிணைந்து மேற்கொண்டனர். பெண்கள் வேட்டைத்தொழிலில் வில் ஏந்தி வேட்டைக்காரியாக, போராளியாக ஆண்களுக்கு நிகராகச் செயல்பட்டாள். விளைபொருட்களை உற்பத்தி செய்வதலிலும், தினைப்புனம் காவலிடுவதிலும் பெண்களே முன்னோடியாவர். இதனைத் தாய்வழி மரபின் தொடக்கம் என்போம். தமிழ்ச்சமூகமே தாய்வழி மரபிலிருந்துதான் தொடங்கியது. "தமிழ்ச் சமூகத்தின் முதல் விவசாயி பெண்தான் என்பதும், இப்பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' முதல் விவசாயக் கருவியாகும். அதுவே தினைப்புனக் காவல் ஆயுதமாக, பின்னர் சூலாயுதமாக மாறியது"(பக்தவத்சல பாரதி - தமிழகப் பழங்குடிகள். ப.42) இதன்மூலம் தொழில் தொடக்கம், இனப்பெருக்கம் இரண்டிலும் முன்னோடியாகத் இருந்தவர்கள் பெண்களே ஆவர்.

தினைத்தொழில் மலைப்பகுதிகளில் இருவேறு வழிகளில நடைபெற்றுள்ளது. பெண்களால் தொடங்கப்பட்ட இத்தொழில் பின்பு ஆண்கள் செய்யுமளவிற்கு உயர்ந்து வருவாய் ஈட்ட உதவியாக இருந்து வந்தது. மாறாக விலங்குகளால் பள்ளங்கள் ஏற்படுத்தப்பட்டு அதில் உற்பத்தி செய்த விவசாயமும், பெண்கள் கொட்டு கொண்டு கொத்தி செய்த விவசாயமும், அறுவடைக்குப்பின்பு தாழ்களில் தழைத்து அதிலிருந்து பெறப்பட்ட விவசாயமும் எனப் பலவாறாக மலைகளில் விவசாயம் நடைபெற்று வந்துள்ளன. மலைகளில் தினைப்புனங்களை எரியூட்டி செய்த வேளாண்முறையை உலகலாவிய நிலையில் மானிடவியலர் பலவாறு குறிப்பிடுகிறார்கள். அவை,

"காட்டெரிப்பு வேளாண்மை (Slash - and Burn Cultivation), இடம்பெயரும் வேளாண்மை (Fallow or Shifting Cultivation), சுவிடன் வேளாண்மை (Swiddn Cultivation), மில்பா வேளாண்மை (Milpa Cultivation), ரோச வேளாண்மை (Roza Cultivation) எனப் பலவாறு கூறப்படுகிறது." (பக்தவத்சல பாரதி - தமிழகப் பழங்குடிகள். ப.118) இத்தொழில்களைச் செய்த தொல்குடியினரை பல்வேறு பெயர்கள் கூறி அழைத்தனர். கானக்குறவர், குன்றக்குறவர், புனக்குறவர், மலைக்குறவர், ஏனல்காவலர், கானவன், நாடன், பல்கிளைக்குறவர், குடிக்குறவர், புனவன், சிறுகுடிக்கானவன் எனப்பெயர்கள் சுட்டப்பட்டன.

"பெண்களைக் குறத்தி, கொடிச்சி, தலைவி, குறுமகள், குறமகள், குறவர்மகளிர், காதல்மடமகள் எனப்பெயர் கூறி அழைக்கப்பட்டனர். கானக்குறவர்களின் பெண்கள் பொருளாதாரத்தில் அதிகஈடுபாடு கொண்டிருந்தனர். காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் விதைத்தல் தொடங்கி, களையெடுத்தல், தினைக்காத்தல், உணவாக்கல், கிழங்காழ்தல், அறுவடைசெய்தல் என எல்லாவற்றிலும் பெண்கள் முக்கியப் பங்காற்றினர். காட்டெரிப்பு வேளாண்மையின் உருவாக்கத்தினால், புதிய தொழிற்கருவிகள் ஏற்பட்டன. குறிப்பாக விதைகள் நடுவதற்குப் பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' மிகமுக்கிய கருவியாகும். இக்கருவிகள் கூரான நடுப்பகுதி பூமியில் விதை ஊனுவதற்குக் குழிபோட உதவியது. இந்தக் கூரான நடுப்பகுதிக்கு இருபக்கத்திலும் சற்று வளைந்த கூர்மையானமுனைகள் களை எடுக்கவும், மண்ணைக் கிளறவும் உதவின. மண்ணுக்கடியில் உள்ள கிழங்குகளை அகழ்ந்தெடுக்கவும் உதவின. இதனைத் தேனுக் குறும்பர்கள் 'குழிக்கோல்' எனவும், பளியர் 'காம்பு' என்றும் குறிப்பிடுகின்றனர்."(பக்தவத்சல பாரதி - தமிழகப் பழங்குடிகள். ப.124) அதேபோன்று கொல்லிமலையை இடமாகக்கொண்டு வாழ்ந்த குறவர்களில் ஒரு பிரிவினர் தமது மணைவி மக்களோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த ஊர் 'சிறுகுடி' என்றழைக்கப்பட்டது. இதனை, "சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறமகள்" (குறுந்.95:3) என்று கூறுகிறது.

மலையினமக்களுக்கு தினையின் தேவை முக்கியமாகப் பயன்பட்ட நிலையில் அத்தொழிலை சரியாகச் செய்யாதபோது மாற்று ஆட்களை நிறுத்தி காவல்காக்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அதனையும் பெண்களே

செய்துள்ளனர். தினைக்காவலின்போது தலைவி தலைவனுடன் இணைந்திருந்தும், அதேநேரத்தில் ஒன்றாகச் சேர்ந்து தினைப்புனத்தின் அமைக்கப்பட்ட ஊஞ்சல் மீது அமர்ந்து, அகன்ற இடத்தையுடைய பெரிய கொல்லையில் சிவந்த கோடுகளையுடைய கிளிகளை உடனிருந்தும் விரட்டியுள்ளனர். இதனை,

"இனக்கிளியாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்
ஊசல் ஊர்ந்து ஆட" (கலி.37:13-14)

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

## வேட்டைத்தொழில்

தினைப்புன விவசாயத்தில் தொடங்கிய மலையினமக்களின் வாழ்வு அழிவுறும் காலங்களில் தங்களைப் பாதுகாப்பதற்காக வேட்டைத்தொழில் நுணுக்கங்களைக் கற்றிருந்தனர். வேட்டைத்தொழிலும் இரவு நேரங்களிலே மேற்கொண்டனர். வேட்டையின்போது கையில் வில் அம்பினையும், காவலாக நாயினைத் தன்னுடன் அழைத்தும் சென்றனர். அவ்வாறு வேட்டைக்குச்சென்ற வேட்டுவன் பெரியமலையிடத்தே தன்னுடைய வேட்டையைத் தொடங்குவான். காடுகளில் தன்னோடு போரிட்ட யானையைக்கொன்று அதன் கொம்பினைக் கருவியாகவும் எடுத்துச்செல்வதுண்டு (அகம்.282:1-4). என்று தொல்கபிலன் எனும் புலவன் பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

### உணவு

குறிஞ்சி நிலத்தை ஒட்டி வாழ்ந்த மக்கள் இரண்டு நிலைகளில் தங்களது வாழ்வை அமைத்துக் கொண்டனர். 1.உணவிற்காக வேட்டையாடுவது, 2.இயற்கையில் கிடைத்த உணவினைப் பயன்படுத்திக்கொள்வது என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். குறவர்களின் உணவுத்தேவை வெட்டி விவசாயம் செய்வதிலும், காட்டெரிப்பு விவசாயம் செய்வதிலும் இருந்த தன்மையில் அதில் தினையே முக்கிய உணவாக அமைந்தது. தினைமாவு குறப்பெண்கள் தினைப்புனம் காவலிடச்செல்லும்போது முற்றி விளைந்த தினையைக் குற்றி அதன் மாவினை உண்டு, பின்னர் தினைப்புனம் காக்கச் சென்றனர். இதனை.

"குறமகள் மென் தினை நுவணை உண்டு" (ஐங்.285:1-3)

என்ற பாடல் வெளிக்காட்டுகிறது.நன்னது நாட்டில் வாழ்ந்த மலைக்குறவர்கள் மலைகளிலுள்ள உடும்பின் இறைச்சியையும், கடமானின் இறைச்சியையும், முள்ளம் பன்றியின் தசையினையும் ஒன்றுடன் ஒன்று கலந்து உண்டனர். அதனோடு மூங்கில் குழாயிலுள்ள முற்றிய தேனையும், நெல்லால் சமைக்கப்பட்ட கள்ளினையும் சேர்த்து அருந்தினர். பின்பு பலாக் கொட்டையின் மாவினையும், புளியம்பழத்தின் புளிப்பு போன்ற மோரினையும் மூங்கில் நெல்லரிசியுடன் கலந்து சமைத்துக்கொடுத்தாள் குறமகள். சமைக்கப்பட்ட உணவினை வருவோர்க்கு குறையாமல் கொடுத்தளித்தனர். இதனை,

"வேய்ப் பெயல் விளையுள் தேக்கட் தேறல்
குறைவு இன்றி பருகி நறவு மகிழ்ந்து
குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி" (மலை.படு.171-183).

வெளிக்காட்டுகிறது. குறிஞ்சியில் வாழும் மக்கள் இயற்கையில் கிடைத்த உணவுகளை உண்டதுபோல், விலங்குகளும் சுற்றுச் சூழலை ஒட்டிக் கிடைத்த உணவினை உண்டு வாழ்ந்தது.

### ஆடை

தொடக் காலத்தில் மனிதன் இலை, தழை, மரப்பட்டை ஆகியவைகளை உடையாக உடுத்தினான். உடை என்பது மேலாடை, கீழாடை என இரண்டாகவே இருந்தது. புறநானூறு இதனை“உண்பது நாழி உடுப்பவை இரண்டே”(புறம்.189) என்று உடுப்பை மேலாடை (இடுப்புக்கு மேல் அணிவது), கீழாடை (இடுப்புக்குக் கீழ் அணிவது) எனக் கூறுகின்றது. “கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கற்சிற்பங்களிலும், வெண்கலச் சிற்பங்களிலிலும் பழந்தமிழர் உடை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் தங்க மோதிரம் ஒன்று (முட்டை வடிவ முன் தோற்றம் உடையது) கரூர் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஓர் இளைஞனும், பெண்ணும் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தம்பதியினர் இடுப்பில் அரையாடை மட்டும் அணிந்துள்ளனர். பெண்ணின் மார்பில் கச்சையோ ஆணின் மார்பில் துண்டு போன்ற ஆடையோ காணவில்லை.”(தொ.பரமசிவன் - அறியப்படாத தமிழகம். பக்.50-51) என்று கூறுகிறார் தொ. பரமசிவன்.

**அணிகலன்கள்**

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பெண்கள் செங்கழுநீர்ப்பூ வெட்சிப்பூ போன்ற மாலைகளை மாலையாகத் தொடுத்துத் தலையில் அணிந்து கொண்டுள்ளனர். தன்னுடைய மார்பகங்களை மறைப்பதற்காக சந்தனத்தைக் குழப்பி பூசிக்கொண்டுள்ளனர். உடம்பில் அணிகளன்களைக் கொண்டே அலங்கரித்துள்ளனர். அத்தோடு கண்களுக்கு மையிடும் வழக்கத்தையும் கொண்டனர். இதனை, “அணிஇழை உண்கண்ஆய்இதழ்க் குறுமகள்” (அகம்.172:16), “ஆகுவள்கொல் பூங்குழை” (குறுந்.159:5) என்று கூறுகிறது. அத்தோடு சங்குகளை அறுத்துச் செய்யப்படும் வளையல்களையும் குறிஞ்சிப் பெண்கள் விரும்பி அணிந்துள்ளனர் (குறுந்.365:1). என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**முருகன்**

தமிழர்களின் தொல்குடிக் குறிஞ்சிநிலக் கடவுள் முருகன். தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்தோடு தெய்வத்தைக் கூறும்போது ‘சேயோன்’ என்கிறார். சேயோன் என்றால் சிவந்த நிறத்தையும் அழகையும் உடையவன். கையில் வேலை வைத்திருப்பதால் “வேல்போர்ச் சேஎய்” (மலைபடு.493) என மலைபடுகாடாம் அவனைச் சிறப்பிக்கிறது. “வெற்றித் தெய்வமான கொற்றவையே அவனுடைய தாய். அவன் கடம்பம் தாரை அணிந்து கடம்பின்கீழ் வீற்றிருப்பான். திருத்தகு சேய் எனவும் போரை விரும்புவன், போர் வன்மை மிக்கவன் எனவும் கூறப்படுகிறான். போருக்குச் செல்லும் அரசனின் சீற்றம் முருகனின் வெகுட்சிக்கு ஒப்பிடப்படுகிறது. விருந்தலையுடைய முருகன் என்று முருகனின் கோயில் பற்றி புறநானூறு கூறுகிறது. அழகிய மனிவிளக்கு ஒளிரும் திருச்சீரலை வாயில் முருகன் கோயில் கொண்டிருப்பதாக அகநானூறிலிருந்து அறியமுடிகிறது. தாழ்ந்த நீரையுடைய கடலின்கண் வெளிய தலையையுடைய திரை அலைக்கும் திருச்செந்தில் இடத்து உறையும் நெடுவேள் என்று புறநானூறு கூறுகின்றது. சங்க இலக்கியத்தில் பல இடங்களில் ‘முருகு’ என்ற சொல்லே முருகனைக் குறிப்பதற்கு வழங்கப்படுகிறது. முருகு என்பதன் பொருள் தெய்வத் தன்மை என்றும், அது முருகக் கடவுளுக்கு ஆகுபெயராக அமைந்தனவாகும்.” (சு.வித்தியானந்தன் - தமிழர்சால்பு. ப.77)

தமிழ்நாட்டில் ‘முருகு’ எனப்பட்ட ஒரு ஆற்றலையே முதலில் வணங்கினர். பின்னர் தனிமனிதச் சிந்தனை வளர்ந்தபோதுதான் முருகு, முருகன் என ஆக்கப்பட்டான். முருகனை, குறிஞ்சிநாதன், குறிஞ்சிக்கிழவன், குறிஞ்சிவேந்தன், குறிஞ்சிக் கடவுள் எனப் பல பெயர்களி;ல் நிகண்டுகள் அழைப்பினும், சங்கஇலக்கியத்தில் வேலன் என்றே அழைக்கப்படுகிறது. வேலன் வெறியாட்டு எடுப்பவன், படிமத்தான் (முருகு:222)என்றும், பூசை செய்யும் தொழிலை உடையவன் என்றும், கையில் வேலினைப் பெற்றிருத்தலின் வேலன் என்றும் பெயர்பெற்றான்.

**முடிவுரை**

குறிஞ்சி நிலம் மக்கள் வேட்டைச் சமூக வாழ்க்கையிலிருந்து மாறி உணவு சேகரித்துவாழும் நிலையினைக் கைக்கொண்டுள்ளனர். மக்கள் குறிஞ்சிப் பூவினை நிலத்துக் சூடியபோதிலும் திணையின் பெயராலே மக்கள் தங்களது வாழ்க்கையை நகர்த்தவில்லை.நிலத்தின் பெயராலே இயற்கையின் தட்ப வெட்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களதுகுடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர்.தொல்காப்பியம் திணைப்பெயர் வழியே நிலங்களை மக்களை

அமைத்திருப்பின்,அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை குறுகிய எல்லைக்குள்ளே இருந்தது. குறிஞ்சி நில மக்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளைச் சிறுகுடி என்றே அழைத்தனர்.அக்குடில்களை ஒட்டியே தினைப்புனக் கொல்லையும், விவசாய நிலங்களும்அமைந்திருந்தன. குடும்ப அமைப்பில் தனிக்குடும்ப அமைப்பே பெரிதும் நிகழ்ந்திருந்தன.குடும்ப அமைப்பிற்கான தொடக்கம் களவு, கற்பு என்ற இரண்டு நிலைகளில்தொடங்கிங்கின. குறிஞ்சிக்கான தெய்வம் முருகன் முதன்மைப்படுத்தப்பட்டன. இங்கு வேலன் வெறியாட்டுமுதன்மையாக நிகழ்த்தப்பட்டன. வழிபாடுகள் பயம், அச்சஉணர்வு, உடல்மாற்றம்இன்னபிற காரணங்களுக்காகவே வழிபாடுகளும் நம்பிக்கைகளும் கடைபிடிக்கப்பட்டன.ஆண்களின் நம்பிக்கையில் மடலேறுதல் மிகவும் சிறப்புப் பெற்றதாக இருந்தன.குறிஞ்சியில் குரவைக் கூத்து மிகவும் சிறப்பு பெற்றதாக அமைந்திருந்தன. மொத்தத்தில்குறிஞ்சிக்கான வாழ்வு இனக்குழு மரபிற்குள்ளே நிகழ்ந்த வாழ்வாகத் தென்படுகிறது.

**ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்**


[1] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ.(த.ப.ஆ) 2004 அகநானூறு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[2] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 ஐங்குநுறூறு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[3] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 கலித்தொகை மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[4] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 குறுந்தொகை மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[5] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 நற்றிணை மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[6] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 பத்துப்பாட்டு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[7] பரிமணம், அ.மா. பாலசுப்பிரமணியன் கு.வெ. (த.ப.ஆ) 2004 புறநானூறு மூலமும் உரையும் , நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை - 600 098.

[8] இளம்பூரணர்(உரை), 2007 தொல்காப்பியம் பொருளதிகாரம், பாரி நிலையம், சென்னை.

[9] இராசமாணிக்கனார். மா., 1970 பத்துப்பாட்டுஆராய்ச்சி, சென்னைபல்கலைக்கழகவெளியீடு, சென்னை.

[10] பக்தவத்சலபாரதி., 2013 தமிழகப்பழங்குடிகள், அடையாளம்பதிப்பகம், திருச்சி.

[11] பக்தவத்சலபாரதி., 2009 பண்பாட்டுமானிடவியல், மெய்யப்பன்பதிப்பகம், கோயம்புத்தூர்.

[12] பரமசிவன். தொ., 1997 அறியப்படாததமிழகம், ஜெயாபதிப்பகம், திருநெல்வேலி.

[13] பன்னீர்ச்செல்வம்.மணி.கோ., 2009 குறவர்பழங்குடிஇனவரைவியல்ஆய்வு, வல்லினம்வெளியீடு, சென்னை.

[14] வித்தியானந்தன். சு., 2006 தமிழர்சால்பு, குமரன்பதிப்பகம், சென்னை.


# References


[1] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Akanaṉuṟu mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[2] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Aikurunuruṉuṟu mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[3] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Kalithogai mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[4] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Kurunthogai mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[5] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Nattrinai mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[6] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Pathupattu mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[7] Parimalam, A.M. Balasuppiramaṇiyaṉ, K.V. (Edi.) 2004 Puranaṉuṟu mulamum uraiyum, New century Publications, Cheṉṉai - 600 098.

[8] Elampuranar(Text), 2007 Tholkappiyam Porulathikaram, Pari Nilayam, Chennai.

[9] Rajamanikanar Ma., 1970 Pathupattu aarachi, Madras University Press, Madras.

[10] Bhaktavatsala Bharati., 2013 Tamizhaga Pazangudigal, Adaiyalam Publishing House, Trichy.

[11] Bhaktavatsala Bharati., 2009 Panpattu Manidavizhal, Meiyappan Publishing House, Coimbatore.

[12] Paramashivam. T., 1997 Ariyapadatha Tamizhagam, Jaya Publishing House, Tirunelveli.

[13] Panneer Selvam. Mani.Co., 2009 Kuravar Pazhankudi Inavaraivizhal Aaivu, Vallinam Publication, Chennai.

[14] Vidhyanandan. Su., 2006 Tamilar Salbu, Kumaran Publishing House, Chennai.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே*